தினமணி

**மகளிருக்கு பதப்படுத்திய உணவுப் பொருள்கள் தயாரிப்பு பயிற்சி**

First Published : 08 Jun 2010 11:56:51 AM IST

தஞ்சாவூர், ஜூன் 7: தஞ்சாவூர் பெரியார் தொழில்நுட்ப வணிகக் காப்பகத்தில் 30 மகளிருக்கு பதப்படுத்திய உணவுப் பொருள்கள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது.

எனவே, விருப்பமுள்ளவர்கள் இப் பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாம் என்று பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப பயிற்சியுடன் வங்கிக் கடன், உபகரணங்கள், இட வசதி உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்படுகிறது. விருப்பமுள்ளவர்கள் தங்கள் பெயரை பதிவு செய்யலாம். நேர்முகத் தேர்வு நடத்தி பயிற்சி பெறுபவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேலும், விவரங்களுக்கு 04362-264520, 93445104264 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**சாலையில் தேங்கிய மழை நீரில் நாற்று நட்டு போராட்டம்**

First Published : 09 Jun 2010 04:10:37 AM IST

ஆரணி, ஜூன் 8:ஆரணியை அடுத்த புனலப்பாடி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி முன் உள்ள சாலையில் மழைநீர் தேங்கியுள்ளதை அடுத்து அப்பகுதியினர் செவ்வாய்க்கிழமை ஏர் உழுது, நாற்று நட்டு நூதனப் போராட்டம் நடத்தினர்.

வேலப்பாடி பஞ்சாயத்திற்குட்பட்ட புனலப்பாடி கிராம தொடக்கப்பள்ளி முன் உள்ள சாலையில் மழைநீர் தேங்கி சேறும் சகதியுமாக காணப்படுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் சாலையை கடந்து செல்லவும், பள்ளி மாணவ, மாணவியர் நடந்து செல்வதற்கும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

ஊராட்சித் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரிடம் பலமுறை புகார் மனு கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை கிராமத்தினர் மழைநீர் தேங்கிய இடத்தில் ஏர் உழுது, நாற்று நடும் போராட்டத்தை நடத்தினர்.

வட்டாட்சியர் கச்சபாளையம், துணை வட்டாட்சியர் பழனி, வருவாய் அலுவலர் வெங்கடேசன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்பகுதியில் மணல் கொட்டி சீரமைக்கவும் அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

**வேளாண் பயிர்களில் ஒருங்கிணைந்த களைக்கட்டுப்பாடு**

First Published : 08 Jun 2010 09:50:54 AM IST

நாமக்கல், ஜூன் 7:வேளாண் பயிர்களில் ஒருங்கிணைந்த களைக் கட்டுப்பாடு குறித்து விவசாயிகளுக்கு ஒருநாள் இலவசப் பயிற்சி வகுப்பு அளிக்கப்படுகிறது.

÷நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில், விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கவும், சுயத்தொழில் செவ்வோரை ஊக்குவிக்கவும் பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதன் ஒரு பகுதியாக வேளாண் பயிர்களில் ஒருங்கிணைந்த களைக்கட்டுப்பாட்டு முறைகள் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி நடைபெறுகிறது.

÷ கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பயிற்சி துவங்குகிறது.

÷இந்த பயிற்சியில், வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் காணப்படும் முக்கிய களைகள் மற்றும் அவை பரவும் விதம், ஒருங்கிணைந்த களைக்கட்டுப்பாட்டு முறைகள், உழவியல் முறையில் ஊடுபயிர் சாகுபடி, பயிர் மூடாக்கு அமைத்தல், பயிர்சுழற்சி முறையில் களைக் கட்டுப்பாடு., இயந்திர முறை களைக் கட்டுப்பாடு, உயிரியல் முறையில் பூச்சிகள் மற்றும் பூஞ்சாணங்கள் மூலம் கட்டுப்பாடு முறைகள் குறித்து விளக்கி கூறப்படும்.

÷ களைக்கொல்லி வகைகள், பயன்படுத்தும் முறைகள், பல்வேறு பயிர்களுக்கு பரிந்துரை செய்யப்படும் முக்கிய களைக்கொல்லிகள், மண்ணில் தங்கும் கால அளவுகள், நச்சுத்தன்மை வாய்ந்த களைகள் மற்றும் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து பயிற்சியுடன் நவீன களை எடுக்கும் இயந்திரத்தின் செயல் விளக்கமும் நடைபெறும்.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். பங்கேற்க விரும்பும் நபர்கள், வேளாண்மை அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ பெயரை பதிவு செய்து கொள்ளலாம். தொலைபேசி எண்: 04286-266345, 266244.

**இறால் பண்ணை விவசாயிகளுக்கு ரூ. 20.94 லட்சம் மானியம்**

First Published : 08 Jun 2010 12:02:32 PM IST

திருவாரூர், ஜூன் 7: திருவாரூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் இறால் பண்ணை விவசாயிகள் 24 பேருக்கு மானியமாக ரூ. 20.94 லட்சம் திங்கள்கிழமை வழங்கப்பட்டன.

திருவாரூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் உவர் நீர் இறால் பண்ணை விவசாயிகள் 24 பேருக்கு உவர்நீர் இறால் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில், 2 ஹெக்டேருக்குள் உள்ள நிலத்தில் பண்ணை அமைத்து கடல்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டு, அனுமதி பெற்ற இறால் பண்ணை விவசாயி ஒருவருக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 60,000 மானியம் வழங்க 2009-2010-ம் நிதியாண்டுக்கு ரூ. 22.01 லட்சம் திருவாரூர் மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த தொகையில் 75 சதவீதத்தை மத்திய அரசும், 25 சதவீதத்தை மாநில அரசும் வழங்குகிறது. இத்தொகையில் நிபந்தனைக்கு உட்பட்ட 24 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு ரூ.

20,94,000 காசோலைகளை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை மாவட்ட வருவாய் அலுவலர் எம். தங்கவேல் வழங்கினார்.

**வெல்ல ஆலைகளுக்கு சர்க்கரை ஆலை எச்சரிக்கை**

First Published : 08 Jun 2010 09:55:54 AM IST

உடுமலை, ஜூன் 7: அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதியில் இயங்கி வரும் வெல்ல ஆலை உரிமையாளர்களுக்கு ஆலை நிர்வாகம் எச்சரிக்கை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இது குறித்து ஆலையின் தனி அலுவலர் சு.இராமகிருஷ்ணன் திங்கள்கிழமை விடுத் துள்ள செய்திக் குறிப்பு: அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் செயல்பாட்டு எல்லையில் பயிரிடப்பட்டு ள்ள ஒப்பந்தம் மற்றும் ஒப்பந்தமில்லா கரும்புகளை ஆலை நிர்வாகத்தின் அனுமதியி ல்லாமல் எடுத்து, வெல்ல ஆலை உரிமையாளர்கள் வெல்லம் தயார் செய்து வருவதா கத் தெரிய வருகிறது.

கரும்புகளை ஆலையின் தடையின்மை சான்று பெறாமல் வெளி உபயோகத்திற்கு கடத்திச் செல்வதை தடை செய்து கரும்பு ஆணையர் உத்தரவிட்டுள்ளார். மேலும் தமிழ்நாடு கரும்பு கட்டுப்பாட்டு சட்டப்படி ஆலை நிர்வாகத்தின் அனுமதி இல்லாமல் கடத்தி செல்லப்படும் கரும்பினை கொள்முதல் செய்து வெல்லமாக தயார் செய்வது அரசு ஆணையை மீறிய செயலாகும்.

ஆலை நிர்வாகத்தின் அனுமதி இல்லாமல் கரும்புகள் கொண்டு செல்லப்படும் வாகனங்களையும் பறிமுதல் செய்திட மாவட்ட ஆட்சியர்களால் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே ஆலையின் செயல்பாட்டு எல்லையில் வெல்ல ஆலை இயக்க உரிமம் பெற்று ள்ள வெல்ல ஆலை உரிமையாளர்கள் தாங்கள் கொள்முதல் செய்யும் கரும்புக்கு ஆ லை நிர்வாகத்தின் தடையின்மைச் சான்று பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஆலையின் தடையின்மை பெறாத கரும்புகளை கொள்முதல் செய் திட வேண்டாம், என்று கூறப்பட்டுள்ளது.

**தமிழகம், புதுவையில் இன்று மழை வாய்ப்பு**

First Published : 09 Jun 2010 12:49:40 AM IST



சென்னை, ஜூன் 8: தமிழகம், புதுவையில் புதன்கிழமை ஒரு சில இடங்களில் இடி-மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மேகமூட்டத்துடன் கூடிய கால நிலை நிலவியது. ஆனால், சில நாள்களாக மிதமான வெப்பநிலை நிலவிய சென்னையில் மாநிலத்திலேயே அதிகபட்சமாக 100 டிகிரி அளவுக்கு வெயில் வாட்டியது.

தமிழகத்தில் இதர முக்கிய இடங்களில் பதிவான வெயிலின் அளவு (டிகிரி ஃபாரன்ஹீட்டில்):

மதுரை-98, கடலூர், புதுச்சேரி 97, திருச்சி, வேலூர், நாகப்பட்டினம் 96, நெல்லை 92, சேலம் 93, தூத்துக்குடி 94, கன்னியாகுமரி 86, கோவை 89, வால்பாறை 79, கொடைக்கானல் 63.

அருப்புக்கோட்டையில் 40 மி.மீ. மழை: தமிழகத்தில் அதிகபட்சமாக அருப்புக்கோட்டையில் 40 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

சென்னையில் புதன்கிழமை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும், மாலையில் ஒரு சில இடங்களில் மழை பெய்யக்கூடும், பகலில் வெப்பநிலை 98 டிகிரியை எட்டக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தினமலர்

- **கரும்பு பயிரில் களை நீக்க"பார்' உழவு பணிகள் தீவிரம்**

தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதியில் பெய்த மழை ஈரத்தை பயன்படுத்தி கரும்பு பயிரிட்ட விவசாயிகள் களைகளை நீக்குவதற்காக "பார்' உழவு செய்யும் பணிகளில் தீவிரமாக

ஈடுபட்டுள்ளனர்.தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் பெரும்பாலான நன்செய் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் இரவில் தியாகதுருகம் பகுதியில் பரவலாக நல்ல மழை பெய்ததால் மண்ணின் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. இதனை பயன்படுத்தி கரும்பு பயிர்களில் வளர்ந்துள்ள களைகளை நீக்குவதற்காக "பார்' உழவு செய்யும் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மாடுகளை ஏரில் கட்டி கரும்பு பயிர்களுக்கு இடையே உள்ள மண்ணை உழுவதால் அங்கு முளைத்துள்ள களைகள் வேருடன் நீக்கப்படுகின்றன. பயிருக்கு இடும் உரச்சத்துக்கள் முழுமையாக கிடைத்து கரும்பு செழித்து வளருகின்றன. "பார்' உழவு செய்ய நவீன இயந்திரங்கள் புழக்கத்தில் இருந்தாலும் பெரும்பாலான விவசாயிகள் பாரம்பரிய முறையான மாடுகளை கட்டி ஏர் உழும் முறையையே பின்பற்றுகின்றனர்.

- **எட்டாத உயரத்தில் ஏலக்காய்: தினம் ஒரு விலைக்கு விற்பனை**

சேலம்: சர்வதேச சந்தையில் இந்திய ஏலக்காய்க்கு நல்ல வரவேற்பு உள்ள நிலையில், உள்நாட்டு தேவையும் அதிகரித்துள்ளதால், விலையில் கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது. ஒரு வாரத்தில் மட்டும் நான்கு முறை விலை ஏற்றத்தை சந்தித்த ஏலக்காய் தற்போது 650 ரூபாய் விலை உயர்ந்து நேற்று கிலோ 2,100 ரூபாய்க்கு விற்பனையானது.

ஏலக்காய் உற்பத்தியில் கேரள மாநிலம் முதல் இடம் பெறுகிறது. அதைத் தொடர்ந்து தமிழகத்தில் தேனி மாவட்டத்தில் அதிக அளவில் ஏலக்காய் விளை விக்கப்படுகிறது. தமிழகத்தில் ஏலக்காய் விளைந்தாலும் கேரள ஏலக்காய்க்கே வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. கேரள மாநிலத்தில் விளையும் ஏலக்காயின் உற்பத்தியில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் நடப்பாண்டில் ஏலக்காய் உற்பத்தி எதிர்பார்த்த அளவு இல்லை. இதனால் இந்தியாவில் ஏலக்காய்க்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் தற்போது திருமண சீஸன் என்பதால் ஏலக்காய்க்காய்க்கான உள்நாட்டு தேவையும் அதிகரித்துள்ளது. தேவை அதிகரித்துள்ள நிலையில் உற்பத்தியில் சரிவு ஏற்பட்டு இருப்பது ஏலக்காய்க்கான கிராக்கியை அதிகரித்துள்ளது.

ஏலக்காயின் ஏற்றுமதி அதிகரிப்பு, கிராக்கி ஆகியவற்றின் காரணமாக ஆன்லைன் வர்த்தகத்தில் ஏலக்காயின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. வெளிமார்க்கெட்டில் கடந்த வாரம் முதல் தர ஏலக்காய் கிலோ 1,450 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரே வாரத்தில் நான்கு முறை விலை ஏற்றப்பட்டுள்ளது. இதில் ஜூன் 1ல் கிலோவுக்கு 200 ரூபாயும், 3ம் தேதி கிலோவுக்கு 100

ரூபாயும் என உயர்ந்த ஏலக்காய் ஜூன் 5ல் மீண்டும் கிலோவுக்கு 150 ரூபாயும், ஜூன் 7ல் 200 ரூபாயும் விலை உயர்த்தப்பட்டு நேற்று மார்க்கெட் நிலவரப்படி கிலோ 2,100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது,. ஏலக்காய்க்கு ஏற்பட்டுள்ள மவுசு காரணமாக இதன் விலை மேலும் அதிகரித்து கிலோ 3,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் என தகவல் பரவியதால், இருப்பு வைத்துள்ள வியாபாரிகள் தங்களின் விற்பனையை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர். இதன் காரணமாக ஏலக்காய் விலையில் மேலும் உயர்வு ஏற்படும் என தெரிகிறது.

சேலம் செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்த ஏலக்காய் மொத்த வியாபாரி சத்தியமூர்த்தி கூறியதாவது: ஏலக்காய் நறுமண பொருளாக இருப்பதுடன் மருத்துவத்துக்காக அதிக அளவில் பயன் படுத்தப்படுகிறது. இதனால் வெளிநாடுகளில் இந்திய ஏலக்காய்க்கு வரவேற்பு அதிகரித்துள்ளது. மேலும் தற்போது திருமண சீஸன் என்பதால் ஏலக்காயின் உள்நாட்டு தேவையில் 30 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் உற்பத்தி பாதிப்பு ஆன் லைன் வர்த்தக சூதாட்டம் ஆகியவற்றின் காரணமாக இதன் விலை செயற்கையாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஏலக்காய் நடுத்த மற்றும் ஏழை மக்களுக்கு எட்டாத காயாமாக மாறி வருகிறது. இந்தியாவில் ஏலக்காய் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் கேரளா, தமிழகத்தின் தேனி மாவட்டங்களில் ஏலக்காய்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வியாபாரிகள் நேரடியாக கொள்முதல் செய்ய துவங்கி விட்டனர். இதனால் உள்நாட்டில் கடும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளதால், இதன் விலையில் மேலும் உயர்வு ஏற்படும் என தெரிகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

---

- **தடை நீங்கியும் குறைந்த பாடில்லை மீன் விலை: ஜூன் 16ல் கேரளாவில் தடை அமலால் மீன் விலை மேலும் உயரும் அபா**

---

சேலம்: தமிழக கடற்கரை பகுதியில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டு இருந்த தடை நீக்கப்பட்டு, ஒரு வாரத்துக்கு மேல் ஆகி விட்ட நிலையில் தமிழகத்தில் மீன் விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. வரும் ஜூன் 16 முதல் கேரளாவில் தடை அமல் படுத்த உள்ளதால் கடல் மீன்களின் விலையில் கடும் உயர்வு ஏற்படும் என தகவல்கள் பரவி வருவது, அசைவ பிரியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மத்திய அரசு கடல் வாழ் உயிரினங்களில் மீன்களின் இன விருத்தியை கருத்தில் கொண்டு ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான காலங்களில் கடலோர மாநிலங்களில் 45 நாள் மீன் பிடிக்க தடை விதித்து உத்தரவு பிறப்பித்து வருகிறது. தென் மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி, தமிழகம் ஆகிய மாநில அரசுகள் ஒன்றன் பின் ஒன்றாக சுழற்சி முறையில் கடலில் மீன் பிடிக்க தடை விதித்து வருகிறது.

---

தற்போது தமிழகத்தில் ஏப்ரல் மாதம் துவங்கி தடை மே மாதம் கடைசி வாரத்தில் முடிவடைந்தது. தடை நீங்கி ஒரு வாரத்துக்கு மேல் ஆகி விட்ட நிலையில் மீன்களின் விலையில் சரிவு எதுவும் ஏற்பட வில்லை. இந்நிலையில் ஜூன் 16 முதல் கேரளாவில் மீன் பிடிக்க தடை அமல் படுத்தப்படுகிறது. இதனால் அங்கிருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் மீனின் வரத்து முற்றிலும் தடை படும். அத்துடன் தமிழக கடலில் பிடிக்கப்படும் மீன்களும் கேரளாவுக்கு அதிக அளவில் விற்பனைக்கு செல்ல உள்ளது. தமிழகத்தில் கடல் மீன்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு தொடர்ந்து இருக்கும் என்பதால் மீன் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை. அதே நேரத்தில் கேரளாவில் தடை அமல் படுத்தப்படும் பட்சத்தில் கடல் மீன்களின் விலையில் மேலும் 25 சதவீதம் அதிகரிக்க கூடும் என வியாபாரிகள் கருத்து தெரிவித்து உள்ளனர். இன்றைய நிலையில் மீன் விலை விபரம்: மத்தி 30 ரூபாய்க்கும், கலங்கம் 50 ரூபாய்க்கும், வஞ்சீரம் 300 ரூபாய்க்கும், வாவல் 200 ரூபாய்க்கும், ஐயல 80 ரூபாய்க்கும், சங்கரா 50 ரூபாய்க்கும், ஊழி 80 ரூபாய்க்கும், சுறா 120 ரூபாய்க்கும், இரால் 200 ரூபாய்க்கும், வலா மீன் 120 ரூபாய்க்கும், கெளுத்தி 90 ரூபாய்க்கும், நெய் மீன் 160 ரூபாய்க்கும், நண்டு 120 ரூபாய்க்கும் விற்கிறது.

கேரளாவில் மீன் பிடிக்க தடை அமல் படுத்தப்படும் பட்சத்தில் மீன்களின் வரத்து குறைந்தால், இவற்றின் விலையில் மேலும் 20 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை விலை உயர வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். இதனால் இன்னும் இரண்டு மாதத்துக்கு மீன்களின் தொடர்ந்து உச்சத்தில் இருக்கும் என தெரிகிறது. இது அசைவ பிரியர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. சேலம் வ.உ.சி., மீன் மார்க்கெட் மீன் வியாபாரி சீனிவாசன் கூறியதாவது: தமிழக கடல் எல்லையில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டு இருந்த தடை நீக்கப்பட்ட போதிலும் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் மீனின் வரத்து எதிர்பார்த்த அளவு இல்லாததால் மீன் விலை தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. இந்நிலையில் ஜூன்16ல் கேரள மாநிலத்தில் மீன் பிடிக்க தடை அமல் படுத்தப்படுகிறது. இதை பயன் படுத்தி அதிக விலைக்கு மீன்களை விற்பனை செய்யும் நோக்கில் கடல் பகுதியில் இருந்து வழக்கமாக மீன்களை அனுப்பும் பெரிய வியாபாரிகள் மீன்களை பதப்படுத்தி வைத்துக் கொண்டு குறைந்த அளவிலேயே மீன்களை விற்பனைக்கு அனுப்பினர். சேலம் உள்பட வடதமிழகத்தில் ஆகஸ்ட் முதல் வாரம் வரை மீனின் விலை ஏறுமுகமாகவே இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

- **மேட்டூர் அணைக்கு 8,000 கனஅடியாக நீர்வரத்து உயர்வு**

மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் பருவமழை காரணமாக மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று மாலை விநாடிக்கு 8,000 கனஅடியாக அதிகரித்தது. மேட்டூர் அணை நீர்மட்டம் ஜூன் 4ம் தேதி 76.700 அடியாகவும், நீர் இருப்பு 38.747 டி.எம்.சி.,யாகவும் இருந்தது.

நான்கு நாட்களாக தமிழக எல்லையில் உள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை பெய்து வருகிறது. அதனால், ஜூன் 4ம் தேதி விநாடிக்கு 3,061 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து 5ம் தேதி விநாடிக்கு 5,049 கனஅடியாகவும், 6ம் தேதி விநாடிக்கு 7,525 கனஅடியாகவும் நேற்று 8,000 கனஅடியாகவும் உயர்ந்தது. நீர்வரத்து அதிகரிப்பால் 4ம் தேதி 76.700 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று மாலை 78.350 அடியாக உயர்ந்தது. நான்கு நாட்களில் அணையின் நீர்மட்டம் 2 அடியும், நீர் இருப்பு 2 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது

- **200 ஏக்கர் மரவள்ளிக்கிழங்கு செடிகள் ஆலங்கட்டி மழையால் சேதம்**

ஆத்தூர்: ஆத்தூர் அருகே, "ஆலங்கட்டி மழை' பெய்ததில், 200 ஏக்கரில் சாகுபடி செய்த மரவள்ளி பயிர்கள் சேதமடைந்துள்ளன. பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும்.

ஆத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மூன்று நாட்களுக்கு முன், சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. அப்போது ஆத்தூர் கல்லாநத்தம், முட்டல், செட்டில்மெண்ட், அம்மம்பாளையம் போன்ற பகுதிகளில், "ஆலங்கட்டி மழை' பெய்தது. ஐஸ் கட்டிகளுடன் பெய்த மழைக்கு கல்லாநத்தம், முட்டல், செட்டில்மெண்ட் பகுதியில் மட்டும் 200 ஏக்கர் பரப்பில் பயிர் செய்திருந்த மரவள்ளி செடிகள் முற்றிலும் சேதமடைந்துள்ளன. இதுகுறித்து முட்டல் கிராம விவசாயி கந்தசாமி கூறியதாவது: ஆத்தூர் பகுதியில் ரோஸ், குங்கும ரோஸ், பர்மா, பண்ருட்டி, வெள்ளை ரோஸ் போன்ற பல்வேறு ரக மரவள்ளி கிழங்கு பயிர் சாகுபடி செய்துள்ளனர். பயிர் நடவு செய்து நான்கு முதல் ஆறு மாதமாகிறது. இப்பகுதியில் பெய்த ஆலங்கட்டி மழையினால், மரவள்ளி செடிகளின் இலைகள் முற்றிலும் உதிர்ந்துள்ளது. இலைகள் கொட்டியதால் வேர்கள் இறங்கி மரவள்ளி கிழங்கு பிடிக்க வாய்ப்பில்லை. மழையால் பாதித்த செடிகளை பிடிங்கி எறியும் சூழல் உள்ளது. ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தால், ஏக்கருக்கு 170 முதல் 200 மூட்டை கிழங்குகள் கிடைக்கும். தற்போது மூட்டை கிழங்கு 500 முதல் 600 வரை விற்பதால் ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்கும். சுற்றுவட்டார பகுதியில் 200 ஏக்கர் மரவள்ளி பயிர் சேதம் ஏற்பட்டதில், 4 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மழையால் அழிந்த மரவள்ளி பயிருக்கு அரசு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

- **எள் அறுவடைக்கு பின் தொழில் நுட்பம் வேளாண் துறை அறிவுரை**

தர்மபுரி: எள் அறுவடைக்கு பின் செய்ய வேண்டிய தொழில் நுட்பம் குறித்து வேளாண் துறை அறிவுரை அளித்துள்ளனர்.வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) (வேளாண், வணிகம்) நாகராஜன், வேளாண் அலுவலர் (வேளாண், வணிகம்) தாம்சன் ஆகியோர் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், பாப்பாரப்பட்டி, கோடிஅள்ளி, எஸ்.குள்ளாத்திரம்பட்டி, ரங்காபுரம், ஆதனூர், ஏரியூர், நெருப்பூர், பி.அக்ரஹாரம், கொட்டாவூர், ஊட்டமலை, பிலிகுண்டு, பாலக்கோடு, காரிமங்கலம், மொரப்பூர், நல்லம்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் 4,432 ஹெக்டேரில் எள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் இன்னும் 20 முதல் 30 நாட்களில் எள் அறுவடை பணிகள் துவங்க உள்ளது.

எள் எண்ணெய் உபயோகம் நாளுக்கு, நாள் அதிகரித்து வரும் நிலையில் நல்ல தரமான எள் விதை உற்பத்தி செய்வது அவசியம். எள் விதைகளில் 51 முதல் 52 சதம் எண்ணெய் சத்து கிடைக்கிறது. தரமான எள் உற்பத்தி செய்வதால், கூடுதல் விலை, அதிக எண்ணெய் சத்து மற்றும் கசப்பு தன்மையற்ற எண்ணெய் கிடைக்க வாய்ப்புள்ளது. எள் அறுவடைக்கு பின் தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைப்பிடித்து கூடுதல் வருவாய் பெறலாம். ள் பயிறு அறுவடையின் போது செடியின் கீழ் பகுதயில் உள்ள இலைகளில் 25 சதவீதம் இலைகள் உதிர்ந்தும் மேலே உள்ள இலைகள் மற்றும் தண்டு பகுதிகள் மஞ்சள் நிறமாக மாறியிருக்க வேண்டும்.

எள் காய்கள் பாதி அளவு மஞ்சள் நிறம் அடைந்து விட்டால் பயிர் அறுவடை செய்ய ஏற்ற பருவமாகும். எள் பயிரின் கீழ் பகுதியில் இருந்து 10வது காயை உடைத்து பார்த்தால், உள்ளே இருக்கும் விதைகள் கறுப்பு நிறமாக மாறியிருந்தால், அறுவடை செய்யலாம். இது கறுப்பு எள் விதைக்கு மட்டும் பொருந்தும். வெள்ளை எள் பயிருக்கு எள் விதை வெள்ளை நிறம் அடைய வேண்டும். இந்த நிலையை தாண்டி அறுவடை செய்தால் எள் காய்கள் வெடித்து விதைகள் சிதறி சேதம் அடையும்.

எள் பயிரை தரை மட்டத்தில் அறுத்து எடுக்க வேண்டும். செடியின் மேல் பகுதியை உள்புறமும், அடிப்பாகமும் வெளிப்புறமும் இருக்கும்படி வைத்து வட்ட வடிவாக, திறந்த வெளியில் அடுக்கி வைக்க வேண்டும். அடுக்கிய எள் செடியில் உள்ள காய்கள் ஒட்டு மொத்தமாக முதிர்ச்சி அடைய மேல் பகுதியில் வைக்கோல் போட்டு மூடி வைக்க வேண்டும். மூன்று நாட்கள் கழித்து எள் பயிரை எடுத்து களத்தில் காயப்பேட வேண்டும். மூன்று முதல் ஐந்து நாட்கள் காய வைத்து பின் விதைகளை தனியே பிரித்து எடுக்க வேண்டும்.

---

பிரிக்கப்பட்ட எள் விதையில் கலந்துள்ள கல், மண், இலைசருகுகள், சுருங்கிய, முதிராத விதைகள், பழுதுபட்ட விதைகள் ஆகியவற்றை தனியே பிரித்து எடுக்க வேண்டும். ஒரு லிட்டர் எள் விதையின் எடை 630 கிராம இருக்க வேண்டும். அப்போது தான் முதல் தரமான எள்ளாக இருக்கும்.

காய்ந்த எள் விதையின் ஈரப்பதம் ஐந்து முதல் ஒன்பது சதவீதத்துக்கு இருந்தால் தரமான எள் விதையாகும். எள் விதைகள் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் வேளாண் வணிக அலுவலர்களால் மூன்று ரகங்களாக பிரிக்கப்படுகிறது. மேலும் விபரங்கள் பெற விரும்புவோர் வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் பணிபுரியும் வேளாண் உதவி அலுவலர்களை (வேளாண் வணிகள்) தொடர்பு கொண்டு பயன் பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

- **மேட்டூர் அணையை திறக்கக்கோரி விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

---

தஞ்சாவூர்: தஞ்சாவூர் சாந்திபிள்ளை கேட் அருகே உள்ள பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் அலுவலகம் முன் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி கர்நாடகத்திடம் இருந்து தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரை பெற்று காலத்துடன் சாகுபடிக்கு தண்ணீரை திறந்திட வேண்டும். தொடர் மின்வெட்டால் கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு, விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. மின் விநியோகத்தை சீர்படுத்த வேண்டும். விதை நெல், உரம், பூச்சி மருந்து விவசாயிகளுக்கு தேவையான அளவில் மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தூர்வாரும் பணிகளை உடன் முடித்திட வேண்டும். கலைஞர் வீட்டுவசதி திட்டத்தில் 200 சதுரடியில் வீடு கட்டுவதை 350 சதுரடியாக உயர்த்தி நிதியை அதிகப்படுத்த வேண்டும். கோடை சாகுபடியாகியுள்ள நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தாமதமின்றி கொள்முதல் செய்ய வேண்டும், என வலியுறுத்தினர்.

மாவட்ட செயலாளர் சாமிநடராஜன் தலைமை வகித்தார். மாநிலக்குழு உறுப்பினர் ஆர்.சி.பழனிவேல், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் பக்கிரிசாமி, மாவட்ட தலைவர் காமராஜ், மாவட்ட பொருளாளர் கோவிந்தசாமி, நிர்வாகிகள் நம்பிராஜன், பழனிஅய்யா, ராமச்சந்திரன் உட்பட பலர் பேசினர்.

---

- **நாற்றங்கால் மூலம் துவரை சாகுபடி ஆய்வு பணிகள் மும்முரம்**

காரைக்குடி: செட்டிநாடு மானாவாரி விவசாய ஆய்வு நிலையத்தில் குறுகிய கால துவரை (வம்பன் 3 வது ரகம்) நாற்றங்கால் நடவு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அதன் தலைவர் பாலசுப்பிரமணியன் கூறியதாவது:செம்மண்ணில் விளையக்கூடிய பயிர் வகைகள் மற்றும் தானிய வகைகள் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. வறட்சி மாவட்டமான இங்கு கால்நடை தீவனம், உளுந்து பயிர் பயிரிடப்பட்டு, ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளோம். கடந்த சில நாட்களுக்கு முன் இப்பகுதயில் பெய்த 10 மி.மீ., மழையை கொண்டு, புதிய பயிர்களை நடவு செய்யலாம். இதன்படி, கர்நாடக மாநிலம் குல்பர்கானை போல, குறுகிய கால துவரம்பு சாகுபடி செய்யலாம்; 110 நாட்களில் பயன் தரக்கூடிய இவ்வகையான பயிர்களை சாகுபடி செய்வதால், அதிக லாபம் பெறலாம். இப்பயிர்களை முதலில் நாற்றங்காலில் பயிர் செய்து, பிறகு நிலத்தில் சாகுபடி செய்வதால், அதிக மகசூல் கிடைக்கும். நேரடி நடவு மூலம் உற்பத்தி திறன் குறையும். இதனால், நாற்றாங்கால் நடவு பயிர்கள் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளப் படுகிறது. தற்போது துவரம் பருப்பு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதை தவிர்க்க ஆராய்ச்சி நடக்கிறது. இம்மாவட்டத்தில், இதுவரை துவரை சாகுபடி கிடையாது. இதை பயிரிட்டால் அதிக லாபம் பெறலாம் என்றார்.

- **பருவமழை தொடங்க உள்ள நிலையில் விவசாயம் கேள்விக்குறி ! கண்மாய் மராமத்து பூர்த்தியாகாமல் விவசாயிகள் கவல**

ராமநாதபுரம்: பருவமழை தொடங்க உள்ள நிலையில் மாவட்டத்தின் கண்மாய்கள் பலவற்றில் மராமத்து பணிகள் நிறைவு பெறாமல் உள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். வறண்ட ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் விவசாயம் கேள்விக்குறியாக உள்ளது. வைகை பாசனம் இருந்தும் முறையான பாசன வசதியில்லாததே இந்நிலைக்கு காரணமாகும். வலது,இடது பிரதான கால்வாய்கள் இருந்தும் அவை பிரயோஜனமின்றி உள்ளன. சேதமடைந்த கண்மாய்களால் மழை நீரை தேக்கி வைக்க முடியாமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர். வீணாக கடலில் கலக்கும் நீரின் ஒரு பங்கினை விவசாயத்துக்கு பயன்படுத்தினால் கூட நல்ல விளைச்சலை காணலாம். வேலை உறுதியளிப்பு திட்டம், அண்ணா மறுமலர்ச்சி திட்டம் என கண்மாய்களை சீரமைக்க எத்தனையோ திட்டங்கள் கொண்டு வந்தும், இன்று வரை நிறைய கண்மாய்கள் காட்சி பொருளாகவே உள்ளன. இது குறித்து "தினமலர்' தொடர்ந்து சுட்டிகாட்டியதால், இப்பிரச்னையை மாவட்ட நிர்வாகம் அரசின் கவனத்துக்கு கொண்டு சென்றது. அதன் பலனாக அரசு தரப்பில் மாவட்டத்தில் கண்மாய் பராமரிப்புக்கு என குறிப்பிட்ட அளவு நிதியை ஒதுக்கியது. பொதுப்பணித்துறை சார்பில், ஆர்.எஸ்.மங்கலம் பெரிய கண்மாயில் இதற்காக தொடங்கிய பணி பெரிய அளவில் பலனளித்தது. மாவட்டம் முழுவதும்

உள்ள கண்மாய்களில் இப்பணி தொடரும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் கடந்த சில மாதங்களுக்கு முன் தெரிவித்திருந்தனர். நாட்கள் கடந்த நிலையில், அதிகாரிகள் கூறியது போல பணிகள் எதுவும் நடந்ததாக தெரியவில்லை. கோடை முடிந்து பருவ மழை தொடங்கியுள்ள நிலையில், நிறைய கண்மாய்களில் மராமத்து இல்லை. பருவமழை தீவிரம் அடையும் போது இதனால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படலாம். இந்த ஆண்டும் நீரினை தேக்க முடியாத நிலை ஏற்பட்டால், மாற்று தொழிலை தேட வேண்டிய கட்டாயத்துக்கு விவசாயிகள் தள்ளப்படுவர். இதை கருத்தில் கொண்டு, பொதுப்பணித்துறையினர் மராமத்து பணியில் மும்முரம் காட்டியிருக்கலாம். காலம் கடந்த நிலையில் வருந்தும் விசயங்கள் பலனளிக்காது என்பதை அதிகாரிகள் இனிமேலாவது புரிந்து கொண்டு செயல்பட்டால் மட்டுமே வறண்ட இம்மாவட்டம் மீண்டு புதுமை பெறும்.

---

- **நெகமத்தில் கொப்பரை ஏலம் கிலோ ரூ.32.80**

---

பொள்ளாச்சி : நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 32.80 ரூபாய் விலை கிடைத்தது.நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 18 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 121 மூட் டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத் தம் 3 வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 47 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 31.25 ரூபாய் முதல், அதிகபட்சம் 32.80 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 74 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 26 ரூபாய் முதல், அதிகபட்சம் 31.10 ரூபாய் வரை விலை கிடைத்தது.அதிகாரிகள் கூறுகையில், "தேங்காய் வரத்து அதிகரித்துள்ளதால் கொப்பரை உற்பத்தியும் அதிகரித் துள்ளது. கடந்த இரண்டு வாரங்களாக நெகமம் ஏலத் தில் கொப்பரை வரத்து அதிகரித்து, விலையும் உயர்ந்து வருகிறது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது கொப்பரை கிலோவுக்கு 80 பைசாவும், இரண்டு வாரங்களில் 1.30 ரூபாயும் விலை அதிகரித் துள்ளது. தென்மேற்கு பருவமழை சீசன் துவங்கியுள் ளதால், வரும் வாரங்களில் கொப்பரை விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது' என்றனர்.

---

- **வால்பாறை வாழைத்தோட்டம் ஆற்றை முழுமையாக தூர்வார வலியுறுத்தல்**

---

வால்பாறை : வால்பாறை வாழைத் தோட்டம் ஆற்றை முழுமையாக தூர்வார வேண்டும் என்று காங்., கோரிக்கை விடுத்துள்ளது.வால்பாறை டவுன் மத்தியப்பகுதியில் அமைந்துள்ளது வாழைத்தோட்டம். இந்தப்பகுதியில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

---

சோலையாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில் ஒன்றான வாழைத்தோட்டம் ஆறு டவுன் வழியாக செல்கிறது. கடந்த ஆண்டு பெய்த கன மழையின் காரணமாக வாழைத்தோட்டம் பகுதியில் 300க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தன. அரசு போக்குவரத்துக்கழக டெப்போவும் தண்ணீரில் மூழ்கியது. வாழைத்தோட்டம் ஆற்றை மழை காலத்திற்கு முன்னதாக தூர்வார வேண்டும் என்று மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். வால்பாறை வந்த மாவட்ட கலெக்டர் உமாநாத் இந்த ஆற்றை தூர்வார ரூ. 5 லட்சம் நிதி ஒதுக்கி பணியை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதனையடுத்து கடந்த ஒரு வாரமாக வாழைத்தோட்டம் ஆறு தூர்வாரும் பணி நடந்தது.வால்பாறை சட்ட மன்ற தொகுதி இளைஞர் காங்., தலைவர் சுதாகர் வெளியிட்டுள்ள அறிக்கை:வால்பாறை வாழைத் தோட்டம் ஆறு தூர்வாறும் பணி பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. ஆற்றின் நடுவே உள்ள கழிவுகள் அள்ளப்படவில்லை. ஐயப்பசுவாமி கோவில் குடியிருப்பு பகுதியிலிருந்து புதிய பஸ் ஸ்டாண்டு வரை ஆற்றை முழுமையாக தூர்வார வேண்டும். பருவ மழை தீவிரமடைவதற்கு முன்னதாக இந்தப்பணியை செய்யவேண்டும் என்று கூறியுள்ளார்.

---

- **பருத்தியில் மாவுப்பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்த ஆலோசனை**

---

தேவதானப்பட்டி: பருத்தி செடிகளில் காணப் படும் மாவுப் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயத்துறை ஆலோசனை கூறியுள்ளது. விவசாய துணை இயக்குனர் பெரியசாமி கூறியதாவது: பெரியகுளம் ஒன்றியம், ஜெயமங்கலத்தில் 80 ஏக்கர் பரப்பளவில் வீரிய ஒட்டுரக பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. இப்பயிர் தற்போது சப்பை பிடிக்கும் பருவத்தில் உள்ளது. இச்செடிகளில் வெள்ளை நிற மாவுப்பூச்சிகள் காணப்படுகின்றன. இதனால் உற்பத்தி பாதிப்பதோடு, பருத்தியின் தரமும் குறைந்து விடும். இப்பூச்சிகள் தாக்கிய பருத்தி செடியின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி விடும். இலையின் அடிப்பகுதி குருத்தும், கிளைகள் மற்றும் தண்டுப்பகுதிகளில் வெள்ளையாக அடைபோல மாவுப்பூச்சிகள் படர்ந்திருக்கும். பருத்தி வயல்களில் எறும்புகள் அதிகமாக காணப்படும். தடுப்பு முறைகள்: வயல்களில் களைகளை அகற்றி சுத்தமாக வைக்க வேண்டும். அதிகம் தாக்கிய பருத்தி செடிகளை அப்புறப்படுத்த வேண்டும். நோயின் தாக்குதல் குறைவாக இருக் கும் போது ஒரு லிட்டர் தண்ணீரில், வேப் பெண் ணெய் 2 சதவீதம் அல்லது வேப்பங் கொட்டை பருப்பு சாறு 5 சதவீதம், அல்லது மீன் எண்ணெய் சோப்பு 25 கிராம் அல்லது புரோபனேஸாஸ் 2 மி.லி., குளோர்பைரிபாஸ் 20 இசி 4 மி.லி., புப்ரோமைசின் 25 எஸ்சி 0.75, டைமெதோயேட் 30 இசி 2.0 மி.லி, இமிடோகுளோபிரிட் 17 எஸ்எல் 0.8 மி.லி., வீதம் கலந்து செடிகள் முழுதும் நனையும்படி தெளிக்க வேண்டும் என்றார்.

---

- **நீலகிரி தேயிலை தொழிற்சாலைகளில் 'கோட்டா' முறை! மலைபோல் தேக்கமடையும் பசுந்தேயிலை**

---

கோத்தகிரி : நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலை மகசூல் அதிகரித்துள்ள நிலையில், தொழிற்சாலைகள் "கோட்டா' முறையை அறிவித்துள்ளதால் விவசாயிகள் திணறி வருகின்றனர்.

நீலகிரி மாவட்ட பொருளாதாரத்தில் தேயிலை விவசாயம் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டத்தில் உள்ள 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு,குறு விவசாயிகள் மற்றும் 2 லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகள் இத்தொழிலை நம்பி உள்ளனர். பசுந்தேயிலைக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமல், தொடர்ந்து விலை வீழ்ச்சி அடைந்ததன் காரணமாக, விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். பல குடும்பங்கள் நீலகிரியில் இருந்து இடம் பெயர்ந்து, சமவெளி பகுதிகளில் பிழைப்பு தேடி சென்றுள்ளனர்.

இந்நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு 10 ரூபாய்க்கும் குறையாமல் விலைக்கிடைத்து வந்தது. இடுப்பொருட்களின் விலையேற்றம், கூலி உயர்வு, விலைவாசி உயர்வு போன்ற காரணங்களால் தோட்டங்களை பராமரிக்க கூட இந்த விலை போதுமானதாக இல்லை. இருப்பினும், விவசாயிகள் ஒரளவு ஆறுதல் அடைந்து கூடுமானவரை தோட்டங்களை பராமரித்து, குடும்ப செலவுகளை சமாளித்து வந்தனர். இதற்கிடையில், கடந்த இரு மாதங்களாக பசுந்தேயிலை விலை படிபடியாக குறைந்து தற்போது ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு 4 முதல் 7 ரூபாய் வரை மட்டும் கிடைக்கிறது. அதுவும், பெரும்பாலான பகுதிகளில் முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் குடும்பத்தை பராமரிக்க கடன்பெறவேண்டிய நிலையில், பல பெற்றோர்கள் கூடுதல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்ற தங்களது குழந்தைகளை பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அனுப்ப முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இது ஒருப்புறம் இருக்க, கடந்த இரு வாரங்களுக்கு முன் பெய்த மழையில், பெரும்பாலான தேயிலை தோட்டங்களில் மகசூல் அதிகரித்துள்ளது.

விலை குறைந்து வந்தாலும், மகசூல் அதிகரித்துள்ளதால் கிடைக்கும் வருவாயை கொண்டு குடும்பத்தை பராமரிக்கலாம் என்ற எண்ணத்தில் விவசாயிகள் பசுந்தேயிலை பறித்து ஏஜென்ட்களுக்கு வினியோகித்து வருகின்றனர். ஆனால், மாவட்டத்தில் உள்ள பல தொழிற்சாலைகள் தற்போது பசுந்தேயிலை கொள்முதல் செய்வதில் தயக்கம் காட்டுகின்றன.இதற்கு காரணம், தொழிற்சாலைகளில் தேங்கியுள்ள பசுந்தேயிலையை அரைக்க

முடியாததே காரணம் என கூறப்படுகிறது. ஒரு தேயிலை தொழிற்சாலை இரவு பகலாக இயங்கினாலும் அதிகப்பட்சம் ஒரு நாளுக்கு 50 ஆயிரம் கிலோ வரை மட்டுமே பசுந்தேயிலை அரைக்க முடியும். ஆனால், தொழிற்சாலைகளில் அரவைக்கு அதிகமாக பசுந்தேயிலை இருப்பதால், மேற்கொண்டு ஏஜென்களிடம் இருந்து கொள்முதல் செய்வதை நிறுத்தி,"கோட்டா' முறை அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் மட்டுமே பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்படும் என அறிவிப்பு பலகையும் வைத்துள்ளன. இதனால், விவசாயிகள் பசுந்தேயிலை பறிக்க முடியாமல் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். அறுவடைக்கு தயாரான பசுந்தேயிலை குறிப்பிட்ட நாட்களுக்குள் அறுவடை செய்யாதப்பட்சத்தில் தோட்டத்திலேயே முற்றி "கரட்டு' இலையாக மாறிவிடுகிறது. கோட்டா முறை தொடரும் பட்சத்தில், விவசாயிகள் கூடுதலான இழப்பை சந்திக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட வாய்ப்புள்ளது. தேயிலை தோட்ட பரப்பளவு அதிகரித்து வரும் அதே நேரத்தில் பல பகுதிகளில் தனியார் மற்றும் இன்கோ தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால், உற்பத்தியாகும் பசுந்தேயிலையை தொழிற் சாலைகளுக்கு வினியோகிக்க முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் இதுபோன்ற பிரச்னைகளில் இருந்து விவசாயிகளை காப்பாற்ற மூடப்பட்ட இண்கோ தொழிற்சாலைகளில் மீண்டும் உற்பத்தியை துவக்கவேண்டும். அப்போது தான் தற்போதுள்ள கோட்டா முறையை மாற்றும் சூழ்நிலை ஏற்படும். இதற்கு தேயிலை வாரியம் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

---

- **விவசாயத்தில் புதிய தொழிற் நுட்பம் "வில்லேஜ்' விவசாயிகளுக்கு சுற்றுலா**

---

கூடலூர் : விவசாயத்தில் புதிய தொழிற் நுட்பம் குறித்து அறிய, கூடலூரை சேர்ந்த 150 விவசாயிகள் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர். தேசிய தோட்டக்கலை இயக்கம், கூடலூர் தோட்டக்கலை துறையினர் சார்பில், கடந்த சில ஆண்டுகளாக கூடலூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் சமவெளி மற்றும் வெளி மாநிலங்களுக்கு விவசாய சுற்றுலா அழைத்து செல்லப்பட்டு வருகின்றனர். இதன், முதல் கட்டமாக 150 விவசாயிகள் நேற்று முன்தினம் சென்றனர். பயணத்தை கூடலூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் தர்மலிங்கம் துவக்கி வைத்து பேசியதாவது: தேசிய தோட்டக் கலை இயக்கம் சார்பில், விவசாய சுற்றுலாவுக்கு 250 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, முதல் கட்டமாக 150 விவசாயிகள் இன்று சமவெளிப் பகுதிகளுக்கு சுற்றுலா அழைத்து செல்லப்படுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தேசிய தோட்ட கலை இயக்கம் 1500 ரூபாய் செலவிடுகிறது. கூடலூரிலிருந்து புறப்படும் விவசாயிகள் கோவை வேளாண் பல்கலை கழக பயிற்சி மேற்கொண்டு, ஒட்டன் சத்திரம் கம்ப்யூட்டர் ஏல

மையத்தை பார்வையிட்டு மதுரையில் தங்குகின்றனர். 9ம் தேதி காலை மதுரை வேளாண் கல்லூரியில் விவசாயம் குறித்து பயிற்சி வழங்கப்படுகிறது. இரவு பெரிய குளத்தில் தங்குகின்றனர். 10ம் தேதி பெரியகுளம் தோட்டகலை கல்லூரியில் பயிற்சி வழங்கப்படும். அன்று இரவு பொள்ளாச்சி ஆணைமலையில் தங்குகின்றனர். 11ம் தேதி கொக்கோ சாகுபடி குறித்து முன்னோடி விவசாயிகளை சந்தித்து பயிற்சி பெறுகின்றனர். பயிற்சி முடிந்து அன்று கூடலூர் திரும்புகின்றனர். இந்த பயணம் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், விவசாயத்தில் புதிய சாகுபடி முறையின் மூலம் உற்பத்தியை பெருக்கவும் உதவும்.இவ்வாறு தர்மலிங்கம் கூறினார்.

- **முகூர்த்த நாட்கள் குறைந்ததால் காய்கறி விலையும் குறைவு**

மதுரை: மதுரையில் கடந்த வாரம் தொடர்ச்சியாக முகூர்த்த நாட்கள் வந்ததால், காய்கறி விலை இரு மடங்கு வரை உயர்ந்தது. தக்காளி, கத்தரிக்காய் விலை கடுமையாக உயர்ந்திருந்த நிலையில், வரும் வாரங்களில் முகூர்த்த நாட்கள் குறைவாக இருப்பதால், காய்கறி விலை கணிசமாக குறைந்துள்ளது.

சென்ட்ரல் மார்க்கெட் சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது :நேற்று ஒரு கிலோ தக்காளி 45 ரூபாய், உருட்டு தக்காளி 25, கத்தரிக்காய் 25, வெள்ளை கத்தரிக்காய் 20, பூசணிக்காய் 7, புடலைங்காய் 15, சுரைக்காய் 7, கேரட் 20, பீட்ரூட் 18, காலிபிளவர் 7-10, முட்டைகோஸ் 10, வெண்டைக்காய் 15, உருளை கிழங்கு 12, சேனை கிழங்கு 25, கருணை கிழங்கு 30, வெங்காயம் 10, சிறியது 16, பாகற்காய் 20, சிறியது 25, இஞ்சி 60, நூக்கல் 12, முருங்கைக்காய் 25, பீன்ஸ் 20, பட்டர் பீன்ஸ் 40, சோயா பீன்ஸ் 45, பட்டாணி 50, கறிவேப்பிலை 15, புதினா 7, கொத்தமல்லி 50, கீரை வகைகள் 10, அவரைக்காய் 25, கொத்தவரை 7, பச்சை மிளகாய் 20, ஆந்திர பச்சை மிளகாய் 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, என்றார்.சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

- **அரிசி விலையில் மாற்றமில்லை**

மதுரை,: மதுரைக்கு நெல் வரத்து குறைந்துள்ளதால், கடந்த வாரம் பொன்னி அரிசி பழசு கிலோவிற்கு 50 காசும், புதுசு ஒரு ரூபாயும், பிரியாணி அரிசி ஒரு ரூபாயும் அதிகரித்தது. இந்த வாரம் இந்த விலையில் மாற்றமில்லை.அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது :கர்நாடக பொன்னி பழசு 38.50 ரூபாய், புதுசு 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

டீலக்ஸ் பொன்னி பழசு 32.50 ரூபாய்க்கும், புதுசு 25 ரூபாய்க்கும், வெள்ளை பொன்னி பழசு 35.50, புதுசு 27க்கும், செல்லப் பொன்னி பழசு 23.50, புதுசு 21க்கும் விற்கப்பட்டது. ஐ.ஆர். இருபது பழசு 23 ரூபாய், புதுசு 21லிருந்து 22 ரூபாய், ஐ.ஆர். 36 பழசு 22 ரூபாய், புதுசு 20லிருந்து 21 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பச்சரிசி சூப்பர் சன்னம் முதல் ரகம் 37 ரூபாய், அடுத்த ரகம் 30, புதுசு 28லிருந்து 29 ரூபாய், மாவு பச்சரிசி பழசு 21, பிரியாணி அரிசி முதல் ரகம் 53, அடுத்த ரகம் 52, 50 ரூபாய்க்கும், புதுசு 46 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது, என்றார்.

- **நெல், பயறு வகை பயிர்களில்அதிக மகசூல் பெறும் வழிமுறைகள்:வேளாண் அதிகாரி விளக்கம்**

தென்காசி:நெல், பயறு வகை பயிர்களில் அதிக மகசூல் பெறும் வழிமுறைகள் பற்றி தென்காசி வேளாண்மை அலுவலர் விளக்கம் அளித்துள்ளார்.தென்காசி வட்டாரத்தில் வேளாண் உற்பத்தியை பெருக்கிடும் வகையில் நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுப்பிரமணியன் உத்தரவின் பேரில், வேளாண்மை துணை இயக்குநர் தேவசகாயம், துரைப்பாண்டியன் வழிகாட்டுதலின் படி 100 சதம் விதை நேர்த்தி மற்றும் மண் பரிசோதனை, செம்மை நெல் சாகுபடி, பயறு வகைகளின் உற்பத்தி பெருக்கம் பற்றி கிராமம் தோறும் பயிற்சி முகாம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் படி காசிமேஜர்புரத்தில் நடந்த முப்பெரும் பயிற்சி முகாமில் தென்காசி வேளாண்மை அலுவலர் உதய குமார் பேசும் போது, விதைகள் மூலம் பரவும் நோய்கள் வராமல் தடுக்கவும், ஊட்டச்சத்துகள் பயிருக்கு கிடைப்பதை எளிதாக்கவும் விதை நேர்த்தி செய்வது அவசியம். டிரைகோடெர்மா விரிடி மருந்தை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் அல்லது சூடோமோனாஸ் மருந்தை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் பயன்படுத்துவதால் விதை மூலம் பரவும் நோயை கட்டுப்படுத்தலாம். நெல் விதைகளை இம்மருந்து கொண்டு விதை நேர்த்தி செய்வதால் நட்ட 40 நாட்கள் வரை குலை நோயிலிருந்து பயிரை பாதுகாக்கலாம்.இதனை பயன்படுத்துவதால் நோய்களுக்கு மருந்தடிக்கும் செலவு மிச்சமாகிறது. பயறு வகை பயிர்களில் இமிடாகுளோபிரிட் மருந்து ஒரு கிலோ விதைக்கு 5 கிராம் என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்வதால் தண்டு ஈ தாக்குதலிலிருந்து பயிர்கள் பாதுகாக்கப்படும்.

நெல் விதைகளுடன் அசோஸ் பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா தலா 2 பாக்கெட் கலந்து விதைப்பதால் வளி மண்டல தழைச்சத்து பயிருக்கு கிரகித்து கிடைக்க செய்வதோடல்லாமல், கரையாத நிலையிலுள்ள மணிச்சத்து பயிருக்கு கிடைக்க கூடிய நிலைக்கு மாறுகிறது. பயறு

வகை பயிருக்கு ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா தலா ஒரு பாக்கெட் கலந்து விதை நேர்த்தி செய்வதாலும் இதே பயன் கிடைக்கும்.மண்ணில் உள்ள கார முமில நிலையறியவும், உப்பின் அளவை கண்டறியவும் பயிருக்கு டைக்கும் நிலையில் உள்ள தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்தின் அளவை அறிந்து கொண்டு அதன் படி உரமிடவும் மண் பரிசோதனை செய்வது அவசியம். நெல் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் அரை அடி ஆழத்தில் "வி' வடிவத்தில் தோண்டி மண் மாதிரி சேகரித்து மாதிரி ஒன்றுக்கு கட்டணமாக 5 ரூபாய் செலுத்தினால் மண் பரிசோதனை செய்யப்பட்டு மண் வள அட்டைகள் வழங்கப்படும். இந்த மண் வள அட்டைகளிலுள்ள பரிந்துரைப்படி மூன்று ஆண்டுகள் வரை உரமிடலாம்.

செம்மை நெல் சாகுபடியில் முதன்மை பெற்று விளங்கும் நெல்லை மாவட்டத்தில் அதிக பட்சமாக ஹெக்டேர் ஒன்றுக்கு 15 ஆயிரம் கிலோ மகசூல் பெற்று கடையநல்லூர் விவசாயி சாதனை புரிந்துள்ளார். நெல் சாகுபடியை சம்மை செல் சாகுபடி முறையில் மேற்கொள்ளும் விவசாயிகள் இது போன்ற அதிக மகசூலை பெற முடியும். ஒரு ஏக்கருக்கு 3 கிலோ விதை, பாய் நாற்றாங்கால், 14 வயதுடைய இள நாற்றுகள் நடவு, ஒன்றை நாற்று 25 செ.மீ. இடைவெளியில் சதுர முறை நடவு, கோனோவீடர் கொண்டு நட்ட 10,20,30 மற்றும் 40ம் நாட்களில் களையெடுப்பு, நீர் மறைய நீர் கட்டும் பாசன முறை, இலை வண்ண அட்டை கொண்டு தழைச்சத்து நிர்வாகம் போன்றவை செம்மை நெல் சாகுபடியின் முக்கிய கூறுகளாகும்.

பயறு வகைகளின் உற்பத்தியை பெருக்க தமிழக அரசின் வேளாமைத்துறை நடப்பாண்டில் புதிய திட்டம் ஒன்றை செயல்படுத்தவுள்ளது. பயறு வகைகளின் உற்பத்தியை பெருக்குவதில் பெரும் முட்டு கட்டையாக உள்ள மஞ்சள் தேமல் நோயை நிர்வாகம் செய்ய இந்நோய் எதிர்ப்புடைய ரகங்களான வம்பன் 3, வம்பன் 4, வம்பன் 5 போன்றவற்றை சாகுபடி செய்ய வேண்டும். நஞ்சை தரிசில் சாகுபடி செய்ய ஆடுதுறை 3, ஆடுதுறை 4 ரகங்கள் ஏற்றவை. 2 சத டி.ஏ.பி.கரைசல் தெளிப்பதால் திரட்சியான பயறு கிடைக்கும். கந்தக சத்து அதிகம் தேவைப்படும் பயறு வகைகளுக்கு ஏக்கருக்கு 44 கிலோ ஜிப்சம் இட்டு அதிக மகசூல் கிடைக்கும் என்றார்.திரளான விவசாயிகள் பயிற்சி பெற்றனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் அன்சர் அலி, நாகராஜன், பரமசிவன் செய்திருந்தனர்.

---

- **நிலக்கடலைக்குஜிப்சம் இடுதல்**

---

தென்காசி:நிலக்கடலை பயிருக்கு உரக்கலவை கரைசல் தெளித்தல் மற்றும் ஜிப்சம் இடுதல் குறித்து தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் விளக்கியுள்ளார்.இதுகுறித்து அவர்

விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:தென்காசி வட்டாரம் கணக்கப்பிள்ளைவலசை, பெரியபிள்ளைவலசை, தேன்பொத்தை, வடகரை, பண்பொழி பகுதிகளில் மானாவாரியாக நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நிலக்கடலை பயிரில் அதிக விளைச்சல் பெற உரக்கலவை கரைசல் தெளித்து ஜிப்சம் இடுவது அவசியம்.

நிலக்கடலையில் வெற்று காய்கள் உருவாவது பெரிய பிரச்னையாக இருகுகிறது. கடலை திரட்சியாக உருவாக உரக்கலவை கரைசல் தயாரித்து தெளிக்க வேண்டும். உரக்கலவை கரைசல் தயாரிக்க டி.ஏ.பி.10 கிலோ, அம்மோனியம் சல்பேட் 400 கிராம், போராக்ஸ் 200 கிராம் 15 லிட்டர் தண்ணீரில் நன்றாக கலந்து இரவு முழுவதும் வைக்க வேண்டும். மறுநாள் காலையில் கிடைக்கும் 13 லிட்டர் கரைசலுடன் 187 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கர் பரப்பில் பயிருக்கு தெளிக்க வேண்டும். பிளானோபிக்ஸ் 140 மில்லியையும் உரக்கரைசலில் கலந்து தெளிக்கலாம். விதைத்த 25 மற்றும் 35வது நாளில் இந்த உரக்கரைசலை தெளிப்பதால் திரட்சியான கடலை பருப்பு கிடைக்கும்.ஒரு ஏக்கர் நிலக்கடலை பயிருக்கு 160 கிலோ ஜிப்சம் தேவை.

இதனை விதைத்த 40 முதல் 45வது நாளில் இட வேண்டும். களையெடுத்த பின் ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். மண் ஈரமாக இருக்கும் போது ஜிப்சம் இட்டால் முழு பலன் கிடைக்கும். நிலக்கடலைக்கு ஜிப்சம் இடுவதால் பயிருக்கு கால்சியம் மற்றும் சல்பர் சத்து போதுமான அளவில் கிடைத்து நிலக்கடலை விழுதுகள் மண்ணில் ௭ளிதாக இறங்கி அதிக எண்ணிக்கையில் கடலை உருவாவதோடு அல்லாமல் திரட்சியாகவும் கடலை கிடைக்கிறது. மேலும் எண்ணெய் சத்து அதிகமாக கிடைக்கும் என அறிக்கையில் வேளாண்மை உதவி இயக்குநர் கூறியுள்ளார்.

---

- **நான்குநேரியில் விவசாயிகள் சங்கம் சார்பில் தடையில்லா மின்சாரம் வழங்ககோரி விவசாய சங்க தலைவர் கிருஷ்ணன்**

---

நான்குநேரி:நான்குநேரி தாலுகா அலுவலகம் முன்பு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.கரந்தாநேரி துணை மின் நிலையத்திலிருந்து முறையற்ற மும்முனை மின் விநியோகத்தை கண்டித்தும், மின் வெட்டை கண்டித்தும் விவசாயிகள் சங்கம் சார்பில் மாவட்ட தலைவர் கிருஷ்ணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.ஆர்ப்பாட்டத்தில் பஞ்., தலைவர்கள் ஆறுமுகம், குமாரசாமி, விவசாய சங்க தலைவர்கள் ஆறுமுகம், எட்டப்பன், ரவி, ராமசுப்பு, முத்துசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் கரந்தாநேரி மின்

நிலையத்திலிருந்து சிங்கனேரி பகுதிக்கு விவசாயிகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது. முத்தையா நன்றி கூறினார்.

- **தூத்துக்குடிக்கு அட்வான்ஸ் கார்சாகுபடிக்கு தண்ணீர் வழங்கும் நாட்கள் அதிரடி குறைப்பு**

தூத்துக்குடி,: தூத்துக்குடி மாவட்டத்தில் அட்வான்ஸ் கார்சாகுபடிக்கு தண்ணீர் வழங்கும் நாட்கள் 44 குறைக்கப்பட்டுள்ளதால் பயிர்களை காப்பாற்ற முடியாத சூழ்நிலை உருவாகும். இதனால் இம் மாவட்டத்தில் அடியோடு விவசாயம் பாதிக்கப்படும் என்று கலெக்டரிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.இது குறித்து தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவை அமைப்பாளர் நயினார்குலசேகரன் கலெக்டரிடம் நேற்று மக்கள் குறைதீர்க்கும் நாளில் கொடுத்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது;
தாமிரபரணி பாசனத்தில் நெல்லை மாவட்டத்தின் கார் சாகுபடிக்கு பாபநாசம் அணையில் இருந்து கடந்த 2ம் தேதியில் இருந்து வினாடிக்கு 500 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் 5 ஆயிரத்து 590 ஏக்கர் கார்சாகுபடி நடக்கும் என்று பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் நாகராஜன் அறிவித்துள்ளார். தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசனப்பகுதிக்கு 2010ம் ஆண்டிற்கான முன் கார்சாகுபடிக்கு 61 நாட்களுக்கு மட்டும் தண்ணீர் வழங்கப்படும் என்று ஏப்ரல் 1ம் தேதி அரசால் அறிவிக்கப்பட்ட 16 ஆயிரத்து 510 ஏக்கர்களுக்கு தண்ணீர் விடும் கெடு கடந்த மே மாத இறுதியுடன் முடிந்துவிட்டன.

முன்கார்சாகுபடி என்பது 105 நாட்கள் கொண்டதாகும். ஆனால் 61 நாட்கள் மட்டும் தண்ணீர் விடப்படும் என்று அரசாணையில் கூறப்பட்டுள்ளது. மீதி 44 நாட்களுக்கு தண்ணீர் வழங்க பொதுப்பணித்துறையால் எந்த உத்தரவாதமும் செய்யப்படவில்லை. மே மாத இறுதியுடன் அரசு உத்தரவு முடிந்து விட்டதால் மீதி 44 நாட்களுக்கு தண்ணீர் வழங்க பொதுப்பணித்துறை அரசிடம் அனுமதி பெற்றுள்ளதா என்பது தெரியவில்லை.இதனால் தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசனத்தில் அரசு அனுமதியுடன் 16 ஆயிரத்து 510 ஏக்கரில் முன்கார் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பயிரை கடைசி வரை காப்பாற்ற முடியுமா என்ற மனக்கலக்கத்தில் உள்ளனர்.இந் நிலையில் மருதூர் அணை மேலக்கால், கீழக்கால் ஆகிய பகுதிகளுக்கு முன்கார் சாகுபடி அரசால் அனுமதி வழங்கப்படவில்லை. ஆனாலும் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாய்மொழி உறுதிமொழியின் பேரில் மேலக்காலில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரிலும், கீழக்காலில் சுமார் 2 ஆயிரம் ஏக்கரிலும் விவசாயிகள் முன் கார்சாகுபடிக்கு நாற்றுப்போட்டு நடுவையும் செய்துள்ளார்கள். சுமார் 60 நாட்கள் பயிராகவுள்ள இவைகள் தண்ணீருக்காக காத்திருக்கின்றன.

தற்போது ரெகுலர் கார் சாகுபடிகாலம் கடந்த முதல் தேதி முதல் ஆரம்பமாகியுள்ளதாலும், மருதூர் அணை மேலக்கால் கீழக்கால் பகுதிகளில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர்களுக்கு முன் கார் சாகுபடி அனுமதி வழங்கப்படாததாலும் இவைகளுக்கு கார்சாகுபடிக்கு அனுமதி வழங்கி தண்ணீர் வழங்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கையாகும். தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசனத்தில் 2010ம் ஆண்டிற்கு முன் கார்சாகுபடிக்கு அனுமதி வழங்கப்பட்ட 16 ஆயிரத்து 510 ஏக்கர்களுக்கும், மீதி 44 நாட்களுக்கும் அரசு அனுமதியுடன் தண்ணீர் வழங்க வேண்டும். முன்கார் சாகுபடி அனுமதி வழங்கப்படாத மருதூர் அணை மேலக்கால் பகுதிகளுக்கு கார் சாகுபடிக்கு அனுமதி வழங்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

- **தக்காளி காய்க்காததால் கவலையில் விவசாயிகள்**

பொங்கலூர் : கடுமையான வெப்பம் காரணமாக, தக்காளியில் பூக்கள் உதிர்ந்து விட்டதால், காய்கள் அற்ற மலட்டு செடியாக மாறி விட்டன. இதனால், விவசாயிகள் செடிகளை அழித்து வருகின்றனர்.

நாற்றங்காலில் நாற்று விட்டு நடுவதால், வேர்கள் பாதிப்புக்கு உள்ளானது; வேர்கள் அறுந்து போவதால் நாற்றுகள் வளர்வதில் சிக்கல் ஏற்பட்டது. இதன் காரணமாக, கோடை காலத்தில் தக்காளி நடவு செய்யும் விவசாயிகள் பலத்த நஷ்டம் அடைந்தனர். இதை தவிர்ப்பதற்காக, நவீன பசுமை குடில் அமைத்து, நாற்றுகளை உற்பத்தி செய்து நடவு செய்தனர்.நவீன முறையில் வளர்க்கப்பட்ட நாற்றுகளின் வேர்கள் அறுந்து போகாமல் இருந்ததால் நன்கு வளர்ந்தது. கடந்த இரு மாதங்களாக கோடை வெயில் சுட்டெரித்ததால், செடியில் பூக்கள் அனைத்தும் உதிர்ந்து விட்டன; பூக்கள் உதிர்ந்ததால் காய் பிடிக்கவில்லை. ஏப்., மே மாதங்களில் பயிர் செய்தால் நல்ல விலை கிடைக்கும் என்று தக்காளி பயிர் செய்த விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.புதிதாக நடவு செய்த செடிகளில் விளைச்சல் இல்லாததால், தக்காளி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சந்தையில் ஐந்தரை கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி 120 முதல் 150 ரூபாய் வரை விலை போகிறது. சில்லரை விற்பனையில் 30 முதல் 36 ரூபாய் வரை விற்கப் படுகிறது.

- **முதல் போக நெல் சாகுபடி பணி துவங்குவதில் சிக்கல்: அமராவதியில் பாசனத்துக்கு தண்ணீர் இல்லை**

உடுமலை : அமராவதி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப் படாததால், நெல் சாகுபடி பணிகள் மேற்கொள்வதில் சிக்கல் நீடிக்கிறது. ஆண்டுதோறும் போதிய மழை

இல்லாததால், அமராவதி அணைக்கு நீர் வரத்து குறைவு பிரச்னையால், எதிர்காலத்தில், இப்பகுதிகளில், இரண்டு போக சாகுபடி, ஒரு போக சாகுபடியாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது.

உடுமலை அருகே உள்ள கல்லாபுரம் பகுதியில், அமராவதி அணை ராஜவாய்க்கால் பாசனத்தில் 1,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இப்பகுதியில், நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. போதிய நீர் வசதியுள்ளதால், இப் பகுதி விவசாயிகள் மற்ற பயிர் சாகுபடி செய்வதை காட்டிலு, நெல் சாகுபடியில் அதிகளவு ஈடுபட்டு வருகின்றனர். பழைய ஆயக்கட்டு பாசனத்தில் குறுவை, சம்பா என ஆண்டுக்கு இரண்டு பருவங்களில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு பருவத்துக்கும் ஏற்ற வகையில் நெல் ரகங்கள் இப் பகுதிகளில் சாகுபடி செய்யப் படுகிறது.

சாகுபடி செய்யப்படும் நெல் அறுவடை செய்து, பல்வேறு மாவட்டங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. இந்நிலையில், இந்தாண்டு போதிய தண்ணீர் கிடைக்காததால், நெல் சாகுபடி பணிகள் மேற் கொள்வதில் சிக்கல் ஏற்பட் டுள்ளது. இதனால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.விவசாயிகள் கூறியதாவது:கல்லாபுரம் மற்றும் சுற்றுப் பகுதிகளில், நெற்பயிர் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. அணை கட்டுவதற்கு முன், நேரடியாக தண்ணீர் வந்ததால், மூன்று போக நெல் சாகுபடி மேற்கொள்ளப் பட்டது. அமராவதி அணை கட்டிய பின், அமராவதி ராஜ வாய்க்கால் பாசனத்தில் ஜூன் முதல் மார்ச் வரை 10 மாதங்களுக்கு தண்ணீர் வழங்கப்படுகிறது.அணையில் இருந்து வழங்கப் படும் தண்ணீரை கொண்டு, இரண்டு போக நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. நெல் அறுவடை பணிகள் முடிவடைந்த தும், மீண்டும் முதல் போக நெல் சாகுபடி பணிகள் ஜூன் மாதத் தில் துவங்கப்படுவது வழக்கமாக உள்ளது.

ஜூன் மாதத்தில் வழங்கப் படும் பாசன நீரினை பயன் படுத்தி, நாற்று விடும் பணிகள் மேற்கொள்ளப்படும். ஆனால், இந்தாண்டு, போதிய மழையில்லாத தால், அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. அணையில் போதிய நீர் இல்லாததால், பாசனத்திற்கான நீர் இன்னும் திறக்கப்படவில்லை. இதனால், நெல் ஒ௦குபடி பணிகள் துவங்குவதில், சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், இதுவரை நெல் சாகுபடிக்கு என தண்ணீர் திறக்கப் படவில்லை.போதிய தண்ணீர் இல்லாததால், இந்த ஆண்டு முதல் போக நெல் சாகுபடி பணிகள் குறிப்பிட்ட நேரத்திற்குள் துவங்கப் படாமல், தாமதமாகி வருகிறது.இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**ஒரு போகமாக மாறும் நிலை:** அமராவதி அணை கட்டுவதற்கு முன், நேரடியாக வரும் நீரை கொண்டு குறுவை, சம்பா, தாளடி என மூன்று பருவங்களில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. அணை கட்டிய பின்பு, மூன்று போக சாகுபடி இரண்டு பருவ சாகுபடியாக மாறியது.தற்போது, போதிய மழையில்லாததால், அணைக்கு நீர் வரத்து குறைவு பிரச்னை ஆண்டுதோறும் ஏற்பட்டு ருவதால், ஒரு போகம் மட்டுமே சாகுபடி மேற்கொள்ளும் அவலநிலை ஏற்பட வாய்ப்புள்ளதால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

---

**பருத்தியில் நுனி கிள்ளுதல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2010,00:00 IST



**நோக்கம்:** தற்போது நிலவிவரும் அதிக வெப்பத்தினால் பருத்திக்கு அதிகம் நீர் பாய்ச்சப் படுகிறது. மேலும் தழைச்சத்து அதிகம் உள்ள இடங்களிலோ அல்லது இட்ட இடங்களிலோ செடி வளர்ச்சி ஊக்குவிக்கப் பட்டு பூ, காய் மற்றும் சப்பைகள் கொட்ட ஆரம்பிக்கும். இதனைக் கட்டுப்படுத்த நுனி கிள்ளுதல் அவசியம் ஆகும். பயிர் வளர்ச்சியில் காய்கள் அதிக பருமனாவதற்கும் நன்கு வெடிக்கவும் கையாள வேண்டிய சில எளிய தொழில்நுட்பங்களில் நுனி அரும்பு கிள்ளுதல் என்பது முக்கிய தொழில்நுட்பமாகும். தழைச்சத்து உரங்கள் அதிகமாக இடுவதால் பயிர்கள் சில சமயங்களில் தேவைக்கு அதிகமாக வளர்ந்து பூப்பிடித்தல் திறன் பாதிக்கப்பட்டு காய்கள் பிடிப்பது குறைந்துவிடும். இத்தகைய தருணங்களில் செடியில் வளரும் நுனிகளை கிள்ளிவிடுவதால் பக்க கிளைகள் உருவாகி பூக்களும் காய்களும் அதிக எண்ணிக்கையில் உண்டாகி தக்க காலத்தில் வெடிக்க உதவி செய்கிறது. சத்துப்பொருட்கள் விரயமாவதைத் தடுத்து பூ மற்றும் காய்களுக்கு ஊட்டமளிக்க உதவி செய்கின்றது.

**நுனி கிள்ளும் பருவம்:** ரகம்: 15 கணுக்களுக்கு மேல் (75-90ம் நாட்களில்), வீரிய ஒட்டு ரகம்: 20 கணுக்க ளுக்கு மேல் (90-100ம் நாட்களில்). நுனி கிள்ளிய பின் நாப்தலின் அசிடிக் அமிலம் 40 பிபிஎம்

(பிளானோபிக்ஸ்) பயிர் ஊக்கியை 4.0 மில்லி மருந்தை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் செடி வளர்ச்சி தடுக்கப்பட்டு காய் கிளைகள் அதிகம் தோன்றும்.

**நன்மைகள்:** காய்கள் அதிகம் தோன்றுதல், செடியின் நுனிக்கிளைகளில் உள்ள காய்ப்புழுக்களின் முட்டைகள் அழிந்துவிடும். இவ்வாறு ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் தெரிவிக்கிறார்.

**ந.முருகேசன், பேராசிரியர் மற்றும் தலைவர்,**

**பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.**

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2010,00:00 IST



**மல்பெரி பட்டுப்புழு கழிவுகளிலிருந்து இயற்கை உரம்**

பட்டுப்புழு வளர்ப்பில் மல்பெரி உணவாக பயன்படுவதோடு உரமாகவும் பயன்படுகிறது. புழுக்களின் கழிவு மற்றும் எஞ்சிய இலைகள், தண்டு மற்றும் இதர கழிவுகளைக் கொண்டு அங்கக உரம் தயாரிக்கலாம். இந்த உரத்தில் மற்ற இயற்கை உரங்களைவிட அதிக அளவ சத்துக்கள் உள்ளன. அதாவது 2.0 - 2.40 சதம் தழைச்சத்து, 1.50-1.80 சதம் மணிச்சத்து மற்றும் 0.93 - 1.00 சதம் சாம்பல் சத்து அடங்கியுள்ளது. நுண்ணூட்டச் சத்துக்களான துத்தநாகம், இரும்பு, மாங்கனீசு மற்றும் கந்தகச்சத்துக்கள் இதில் அதிக அளவு உள்ளன. இந்த அங்கக உரமானது மல்பெரி பயிருக்கு மட்டுமல்லாது பிற பயிர்களுக்கும் பயன்படுகிறது. ஒரு ஏக்கர் மல்பெரி தோட்டத்தில் இருந்து இலை அறுவடை முறையில் புழு வளர்ப்பு செய்தால் 3539 கிலோ

கழிவுகளும், தண்டு அறுவடை முறையில் 3754 கிலோவும் வருடத்திற்கு கிடைக்கிறது. ஒரு ஏக்கர் பட்டுப்புழு வளர்ப்பில் புழுவிலிருந்துவரும் கழிவுகள் மட்டும் 2400 கிலோ கிடைக்கிறது.

உரம் தயாரிக்கும் முறை: பட்டுப்புழு படுக்கை கழிவுகளை 3து1து1மீ அளவுள்ள குழிகளில் இடவேண்டும். இக்குழிகள் ஒரு ஏக்கர் மல்பெரி தோட்டத்திலிருந்து கிடைக்கும் கழிவுகளை மக்கவைக்க உதவும். மேலும் இதுபோன்ற 2 குழிகளை அருகருகே அமைத்தால் மாற்றி மாற்றி உபயோகிக்க வசதியாக இருக்கும். இக்குழிகளில் பட்டுப்புழு படுக்கை கழிவுகள், தென்னைக்கழிவுகள் மற்றும் வேம்புக்கழிவுகள் ஆகியவற்றை சீராக பரப்ப வேண்டும். இதன்மீது சாணக்கரைசல் மற்றும் தேவையான அளவு நீர் தெளிக்க வேண்டும். இத்துடன் சூப்பர் பாஸ்பேட் உரத்தினை சேர்ப்பது உரத்தின் சக்தியை ஊட்டமேற்ற உதவும். இம்முறையை அடுக்கடுக்காக செய்துவர வேண்டும். அதாவது குழி நிரம்பி 30 முதல் 45 செ.மீ. அளவு நிலமட்டத்திற்கு மேல் வரும்வரை இதனைத் தொடர்ந்து செய்துவரவேண்டும்.

இக்குழியில் உள்ள உரத்தை மழை மற்றும் வெயிலில் இருந்து பாதுகாக்க மேற் கூரைகள் அமைத்தல் நல்லது. உரம் விரைவில் மக்குவதற்கு டிரைகோடெர்மா, சூடோமோனாஸ் மற்றும் அஸ்பர்ஜில்லஸ் ஆகிய நுண்ணுயிர்களை சேர்ப்பது விரைவில் நன்மைஅளிக்கக்கூடியதாக அமையும்.

இந்த அங்கக உரத்தினை மண்ணிலிடுவதால் நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையும் செயல்திறனும் அதிகரிக்கிறது. மேலும் தாவரங்கள் செழித்து வளர்கின்றன. எனவே இவ்வுரத்தினை பயன்படுத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் பயிர் வளர்ச்சியையும் அதிகப்படுத்தலாம். (தகவல்: கா.ராமமூர்த்தி, செல்வி மா.ரேவதி மற்றும் ரா.பாலகுருநாதன், பட்டுப்புழுவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003).

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2010,00:00 IST



தென்னையில் இளங்காய்கள் உதிர்தல்: தென்மேற்கு பருவகாலங்களில் பைடோப் தோரா பாலிமிவோரர் பூசணம், இளங்காய்கள் உதிர்வதற்கு காரணமாகிறது.

**அறிகுறிகள்**: காய்களின் மேல், அடிப்பகுதியில் வண்ணம் மாறுதல் (பழுப்பு) மற்றும் காய்களின் அரைப்பகுதி வரை பரவியிருத்தல். காய்களின் உட்திசுக்கள் மிக மிருதுவாக இருத்தல். அழுகிய பருப்புகளிலிருந்து துர்நாற்றம் வீசும். பொதுவாக காய் உதிர்வு ஜனவரி-பிப்ரவரி, ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் ஏற்படுகிறது. சாறு உறிஞ்சும் பூச்சி வகை கள், எறும்புகள், பறவைகள் மற்றும் எலிகள் போன்ற இதர காரணங்களாலும் காய் உதிர்வு ஏற்படுகிறது.

**காய்உதிர்வு மேலாண்மை**: ஒரு சத போர்டோ கலவையை பருவமழைக்கு முன்னும் பின்னும் தெளிக்க வேண்டும். மரத்தின் கொண்டைப்பகுதியினை சுத்தம் செய்தல், உதிர்ந்த காய்களை எரித்தல், டிடிடி மற்றும் குளோரிமேன் பூச்சிகொல்லியை பயன்படுத்துதல், பாராக்வாட் களைக்கொல்லியை தண்டின் அடிப்பகுதியில் இடவேண்டும். எறும்பு புற்றுகளை கட்டுப்படுத்த டை எல்ட்ரின் தண்டின் அடிப்பகுதியில் இடவேண்டும்.

பயோ-ஜிங் (ஜிங் குளூகோனேட்): அனைத்து நுண்ணூட்டச் சத்துக்களும் ரசாயன வடிவில் உள்ளன. ஒரு சில மட்டும் கிலேட்டட் வடிவில் உள்ளன. பயிர்களுக்கு இடும்பொழுது கிலேட்டட் வடிவில் உள்ள நுண்ணூட்டச்சத்துக்களே பெரிதும் விரும்பி இடப்படுகிறது. கிலேட்டட் வடிவில் உள்ள ஊட்டச்சத்துக்களைவிட பயிர்களுக்கு சிறிய அளவிலும் எளிதில் எடுத்துக்கொள்ளும் வடிவிலும் உள்ளன. பயோஜிங் இலைவழி தெளிப்பு மற்றும் சொட்டு நீர்ப்பாசன வழி உரமிடுதலுக்கு ஏற்றது. அதிகப்படியான ரசாயன உரங்களை இட்டு தீவிர விவசாயத்தினால் அதிகப்படியான ஜிங் வளம் நிலத்தில் குறைந்து ஜிங் பற்றாக்குறை ஏற்படுகிறது. பொதுவாக விவசாயத்தில் ஜிங் உரங்கள் பயிரின் ஆரம்ப வளர்ச்சிப்பருவத்தில்தான் இடுவர். பயிர்கள் ஜிங் ஊட்டச்சத்தை சிறிது நேரத்திற்குப் பின்தான் எடுத்துக்கொள்கிறது. அதாவது பயிர் சிறிது வளர்ந்தபின் வளர்ச்சி நேரத்தில் பயிர்கள் ஜிங் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகின்றன. ஜிங் பற்றாக்குறையை சரியான நேரத்தில் போக்கி பயிர்களின் விளைதிறனை அதிகரிக்க ஜிங்கை இலைவழி தெளிப்பு உரமாக வேர் அல்லது சொட்டுநீர் பாசனம் மூலம் உரமிட வேண்டும்.

**ஜிங் பற்றாக்குறை பயிர்கள்**: நெல், மிளகாய், தானியங்கள் சோளம், பீன்ஸ், பருத்தி, உருளைக்கிழங்கு, கோதுமை, திராட்சை, கரும்பு, பட்டாணி, மலைப்பயிர்கள் மற்றும் பிற பயிர்கள்.

**மண்வழி இடுதலுக்கு**: பயோஜிங் குருணை வடிவில் பயிர்களின் ஆரம்ப வளர்ச்சி பருவத்திற்கு இடுவதற்கு ஏற்ற வகையில் உள்ளது. ஒரு ஏக்கர் நாற்றங்காலுக்கு 2 கிலோ பயோஜிங் குருணை இடவும். நட்ட மற்றும் விதைத்த பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 5 கிலோ பயோஜிங் இடவும். பயோஜிங் குருணையை பாஸ்பேட் உரம் இடுவதற்கு 18-20 நாட்களுக்கு முன் இடவும். மேலும் விபரங்களுக்கு கேடிசி பயோ டெக்னாலஜி பெர்டிலைசர்ஸ், கோவை, 0422-420 2040, 93631 52441, 93457 28306.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**மருத்துவ பயிர் சீனி துளசி (ஸ்டீவியா)**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2010,00:00 IST

சீனி துளசி என்றழைக்கப்படும் ""ஸ்டீவியா ரியோடியானா'" ஒரு மருத்துவ பயிர். இப்பயிர் சூரியகாந்தி குடும்பத்தைச் சார்ந்தது. இப்பயிரில் இருந்து எடுக்கப்படும் ""ஸ்டீவியோ சைட்'" மற்றும் ""ரிபோடிசைட்'" சர்க்கரைக்கு மாற்றாக உணவில் பயன்படுகிறது. மிக குறைந்த சர்க்கரை மற்றும் மாவு சத்து கொண்ட இந்த பொருட்கள் நீரிழிவு நோயாளிகளுக்கு ஒரு மருந்தாக பயன்படுகிறது.
**சாகுபடி குறிப்புகள்:** ஸ்டீவியாவை பயிரிடும்போது சில காரணிகளை விவசாயிகள் கவனத்தில் கொள்ளவேண்டும்.
போதுமான வெளிச்சம் மற்றும் வெட்பம்: நல்ல வெளிச்சம் தேவை. மேலும் 38 டிகிரி செல்சியசுக்கு மேல் வெப்பநிலை இல்லாத இடம் மிக சிறந்தது.
**காற்றின் ஈரப்பதம்:** காற்றின் ஈரப்பதம் 60%க்கு மேல் இருந்தால் சீனி துளசி செழித்து வளரும்.
**காற்றோட்டம்:** சிறந்த காற்றோட்டம் உள்ள இடங்களை தேர்வு செய்து ஸ்டீவியாவை பயிரிட வேண்டும். இதன் விதைகள் மலட்டுதன்மை கொண்டது. மேலும் இதன் விதைகள் முளைப்பு திறன் மிக குறைவானதாலும் ஸ்டீவியாவை திசுவளர்ப்பு முறையில் வீரிய கன்றுகளாக மாற்றி பயிரிட்டு வரு கிறார்கள். தமிழகத்தை பொறுத்தவரை மொத்தம் 18 தனியார் விவசாய நிறுவனங்கள் ஸ்டீவியா கன்றுகளை விற்பனை செய்கின்றன. தமிழ்நாடு தோட்டக்கலை துறையை விவசாயிகள் அணுகினாலும் ஸ்டீவியா வீரிய கன்றுகளை பெற்றுக் கொள்ளலாம். தமிழகத்தை பொறுத்தவரை இப்பயிர் ""கான்டிராக்ட் பார்மிங்" முறையில் பயிரிடப்படுகிறது.
**மண்வகை:** சிவப்பு வண்டல் மண் மிக சிறந்தது. மண்ணின் கார அமில தன்மை 6 முதல் 7 வரை இருக்க வேண்டும். சிறந்த வடிகால் வசதிதேவை. களிமண் பகுதிகளில் ஸ்டீவியா நன்றாக வளருவதில்லை.
**உழவு:** இரண்டு முறை உளி கலப்பை கொண்டு ஆழ உழவு செய்ய வேண்டும். ரோட்டவேட்டர் பயன்படுத்துவது நல்லது. மணல் கட்டிகள் இல்லாமல் இருக்க வேண்டும். அரை அடி உயரத்தில் அரை அடி அகலத்தில் பாத்திகளை அமைத்துக் கொள்ள வேண்டும். பாத்திக்கு பாத்தி ஒரு அடி இடைவெளியை கடைபிடியுங்கள். செடிக்கு செடி அரை அடி இடைவெளி விட்டு நட்டால் ஏக்கருக்கு உங்களுக்கு 40 ஆயிரம் செடிகள் தேவைப்படும்.
தமிழ்நாடு தோட்டக்கலை உதவியுடன் 65% மானியத்தில் சொட்டுநீர் பாசன வசதி செய்துகொள்ளுங்கள். செடிகளில் வாட்டம் காணாமல் தண்ணீர் கொடுக்க வேண்டும். பரிந்துரைக்கப் படும் உர அளவு 110:45:45 என்பிகே / ஏக்கர். இயற்கை உரங்களை பயன் படுத்துவது நல்லது. அடியுரமாக ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் / இயற்கை உரம் இடவேண்டும். சூடோமோனாஸ், வெர்டிசீலியம் போன்ற உயிர் உரங்களை பயன்படுத்தி நல்ல மகசூல் பெறலாம்.
சீனி துளசியில் நமக்கு தேவை இலைகளே... பூக்கள் பூத்தால் செடியின் வளர்ச்சி நின்றுவிடும். எனவே பூக்கள் தென்படும் போதெல்லாம் நுனியை கிள்ளி பூக்களை எடுத்துவிட்டால் ஸ்டீவியா செழித்து வளரும். சிறந்த முறையில் பராமரிக்கப்படும் சீனிதுளசி 3 முதல் 5 வருடம் தொடர்ந்து நல்ல மகசூல் தரும்.
**அறுவடை:** சீனிதுளசியில் அதன் இலைகளே மகசூல். இலைகளை நாம் பறித்து எடுக்கலாம். அல்லது கிளைகளை பூமியிலிருந்து 10 முதல் 15 செ.மீ. உயரத்தில் வெட்டி எடுத்து பின் இலைகளை பிரித்துக்கொள்ளலாம். வருடத்திற்கு 4 முறை அறுவடை செய்யலாம். வருடத்திற்கு ஒரு எக்டேரில்

சராசரியாக 21,500 கிலோ இலைகள் கிடைக்கும். இதை காயவைத்தால் ஏக்கருக்கு 3000 கிலோ காய்ந்த சீனி துளசி இலைகள் கிடைக்கும். சராசரி நிகர லாபம் ரூ.1,50,000/ஏக்கர்/வருடம்.

**மருத்துவ பலன்கள்**: நீரிழிவு நோய்க்கு பயன்படும் இயற்கை சர்க்கரை. மிக குறைந்த கொழுப்பு சத்து கொண்ட சர்க்கரை உணவு. உணவு பொருட்களில் சேர்க்கப்படும் இயற்கை சர்க்கரை சுவை. ரத்த கொதிப்பை கட்டுப்படுத்துகிறது. ஜீரண சக்தியை சீராக்கும். அழகு சாதன பொருட்களில் ஸ்டீவியா பயன் படுகிறது. சரும நோய்களை தீர்க்கும் மருந்துகளில் சேர்க்கப்படுகிறது. இருதய நோய் தொடர்புடைய மருந்துகளில் ஸ்டீவியா உள்ளது. குளிர்பானங்களில் பயன்படுகிறது.

**எம்.ஏ.கபீர், பி.எஸ்சி(அக்ரி), எம்.பி.ஏ., வேளாண் ஆலோசகர், தாராபுரம், 95004 48077.**

## *நடப்பு ஆண்டு மே மாதத்தில்*
## *சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 32% சரிவு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*

*நடப்பு ஆண்டு மே மாதத்தில் 60,228 டன் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டு மே மாதத்தில் 89,156 டன்னாக இருந்தது. ஆக, சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 32 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது.*

*விலை அதிகரிப்பு*

*சோயாபீன் போதிய அளவு கிடைக்காததால் உள்நாட்டில் அதன் விலை அதிகரித்து வருகிறது. எனவே சோயாபீனை வாங்குவது, அரைப்பது, எண்ணெய் மற்றும் புண்ணாக்கு எடுப்பது போன்றவை ஆதாயமளிப்பதாக இல்லை. எனவே இதன்*

ஏற்றுமதி சரிவடைந்துள்ளது என சோயாபீன் பதப்படுத்துவோர் சங்கம் (சோபா) தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து சோயா புண்ணாக்கு, கடலைப் புண்ணாக்கு, ஆமணக்கு புண்ணாக்கு, கடுகு புண்ணாக்கு போன்றவை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நம் நாட்டிலிருந்து தென் கொரியா நாடு குறிப்பிடத்தக்க அளவிற்கு புண்ணாக்கு வகைகளை இறக்குமதி செய்து வருகிறது.

நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்தில், நம் நாட்டிலிருந்து, ஒட்டுமொத்த அளவில், 2.04 லட்சம் டன் புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 2.39 லட்சம் டன்னாக இருந்தது. ஆக, அம்மாதத்தில் புண்ணாக்கு ஏற்றுமதி சுமார் 15 சதவீதம் சரிவடைந்துள்ளது.

எண்ணெய் வித்துகள்

நம் நாட்டிலிருந்து அதிக அளவில் புண்ணாக்கை இறக்குமதி செய்யும் நாடுகளில் இதற்கான தேவை நன்கு இருந்த நிலையிலும் ஏற்றுமதி குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில மாதங்களாக, உள்நாட்டில் எள், நிலக்கடலை, சோயா, கடுகு போன்ற பல்வேறு எண்ணெய் வித்துக்களின் அரவை குறைந்ததே புண்ணாக்கு வகைகள் ஏற்றுமதி குறைந்து வருவதற்கான முக்கிய காரணமாகும்.

## தயிலை விலை வீழ்ச்சியால்

## தோட்டத்தை பராமரிக்க ஆர்வம் காட்டாத விவசாயிகள்

குன்னூர், ஜூன்.9–

தேயிலை விலை வீழ்ச்சி யால் தோட்டத்தை பராமரிக்க விவசாயிகள் ஆர்வம் காட்டுவது இல்லை.

சிறு விவசாயிகள்

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் சிறு விவசாயிகள் தேயிலை சாகு படியில் ஈடுபட்டு வருகின்ற னர். இந்திய அளவில் நீலகிரி மாவட்டத்தில் தான் அதிக அளவில் சிறு தேயிலை விவசாயிகள் உள்ளனர்.

கடந்த 1998–ம் ஆண்டு முதல் 2000–ம் ஆண்டு வரை தேயிலைக்கு நல்ல விலை இருந்து வந்தது. 2000–ம் ஆண்டில் இருந்து தேயிலை யின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. தேயிலையின் விலை வீழ்ச்சிக்கு தரமற்ற தேயிலை தூள் காரணம் என்பது கண்டுபிடிக்கப்பட் டது.

தரமான தேயிலை

இந்த நிலையில் தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனராக ஆர்.டி.நசீம் பொறுப்பேற்ற பின்னர் தரமற்ற தேயிலை தூள் தயாரிக்கும் தேயிலை தொழிற் சாலைகள் மீது நடவடிக்கை மேற்கொண்டார். இதனால் சிறு தேயிலை விவசாயிகள் தரமான பச்சை தேயிலையை தொழிற் சாலைகளுக்கு வழங்கி வருகின்றனர்.

கடந்த 2008–ம் ஆண்டு மே மாதம் முதல் தேயிலையின் விலை உயர தொடங்கியது.

உயர்ந்த பட்சமாக 5 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை தேயிலை தூளுக்கு விலை உயர்ந்தது. இதனால் பச்சை தேயிலைக்கு 15 ரூபாய்க்கு மேல் விலை கிடைத்து வந்தது.

விலை வீழ்ச்சி

கடந்த 2009–ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளான கென்யா, இலங்கை போன்ற நாடுகளில் வறட்சி நீங்கியது. வறட்சிக்கு பின்னர் அந்த நாடுகளில் தேயிலை உற்பத்தி அதிகரித்தது. வட இந்தியா விலும் தேயிலை உற்பத்தி அதிகமானது. இதன் காரண மாக தென் இந்திய தேயிலை தூளின் விலை ஏல மையத்தில் குறைந்தது. குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தொடர்ந்து தேயிலை தேக்கமடைவதோடு விலை வீழ்ச்சியும் ஏற்பட்டு வருகிறது.

தேயிலை தூள் விலை வீழ்ச்சியினால் பச்சை தேயிலை விலையும் குறை வடைந்து வருகிறது. கடந்த 5–ந் தேதி பச்சை தேயிலைக்கு வார விலையாக ரூ.6.50 என நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

ஆர்வம் இல்லை

தேயிலை தோட்டத்தை பராமரித்தால் தான் தரமான பச்சை தேயிலை பறிக்க இயலும். இடு பொருட்கள் விலை உயர்வு, கூலி உயர்வு இவற்றால் சிறு தேயிலை விவசாயிகள் திண்டாடி வரு கின்றனர். தற்போது தேயிலை விலை வீழ்ச்சி விவசாயிகளை கவலையில் ஆழ்த்தி உள்ளது. குன்னூர் பகுதியில் பருவ மழை பெய்த போதும் சிறு தேயிலை விவசாயிகள் உரமிட ஆர்வமின்றி உள்ளனர். மேலும் தோட்டத்தை பரா மரிக்கவும் ஆர்வமின்றி உள்ளனர்.

எனவே மத்திய, மாநில அரசுகள் தேயிலை பிரச்சனையில் தலையிட்டு தேயிலை விலை உயர வழி வகை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை சிறு விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.